பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

21 03 2025 **FRIDAY** **7.15 AM**

ஆகாஷ்வாணி
<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இயற்கையைப் பாதுகாக்க மரக் கன்றுகளை நடுவது அவசியம் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

2. இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவதென இந்தியாவும் -பொலிவியாவும் முடிவு செய்துள்ளன.

3. தேர்தல் நடைமுறைகளை வலுப்படுத்த முக்கிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

4. சர்வதேச காடுகள் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

5. சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் தலைவராக ஜிம்பாப்வேயைச் சேர்ந்த திருமதி கிறிஸ்டி கோவென்ட்ரி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

*---- இனி விரிவான செய்திகள் --*

**<<<<<<>>>>>>**

இயற்கையைப் பாதுகாக்க மரக் கன்றுகளை நடுவது அவசியம் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

குஜராத்தின் தார்வாட் சமாஜின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சியில் காணொலி மூலம் உரையாற்றிய அவர், கால்நடை வளர்ப்பு, இயற்கை விவசாயம் ஆகியவற்றின் அவசியத்தையும் எடுத்துரைத்தார்.

நாட்டு இன கால்நடைகள் பாதுகாப்புக்காக தேசிய கால்நடை இயக்கம் செயல்படுத்தப்படுவதை அவர் சுட்டிக்காட்டினார்.

இத்திட்டத்தின் பலன்களை உரிய முறையில் பயனாளிகள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

மண்வளத்தை பாதுகாக்க ரசாயன உரப்பயன்பாட்டை குறைக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

நாட்டின் வளர்ச்சிக்கு கிராமப்புறங்களின் மேம்பாடும், மகளிர் மேம்பாடும் முக்கியமானது என்று திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

சேவைத் துறையில் 450 பில்லியன் டாலர் ஏற்றுமதி இலக்கை அடைய தகவல் தொழில்நுட்பத் துறையின் பங்களிப்பு அவசியம் என்று மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், வரும் நிதியாண்டில் சேவைத்துறை ஏற்றுமதி அதிகரிக்கும் என்றார்.

நாட்டில் குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் விரைவான வளர்ச்சியை எட்டி வருவதாகவும், இத்துறையும் ஏற்றுமதியில் முக்கிய பங்காற்றுவதாகவும் திரு பியூஷ் கோயல் கூறினார்.

<<<<<<>>>>>>

இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதென இந்தியாவும் - பொலிவியாவும் முடிவு செய்துள்ளன.

இதுதொடர்பாக, இருநாடுகளுக்கும் இடையே ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், புதுதில்லி வந்துள்ள பொலிவியா வெளியுறவு அமைச்சர் செலிண்டா-வுடன் நடத்திய பேச்சுக்கள் ஆக்கப்பூர்வமாக அமைந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>

ஒடிஷாவில் இளைஞர்களின் திறன் மேம்பாட்டுக்கென மத்திய அரசு சார்பில் சிறப்பு மையம் அமைக்கப்படும் என்று திறன் மேம்பாட்டுத்துறை இணையமைச்சர் திரு ஜெயந்த் சௌத்ரி கூறியுள்ளார்.

புவனேஷ்வரில் அம்மாநில முதலமைச்சர் திரு மோகன்சரண் மாஜியுடன் ஆலோசனை நடத்தியபின்னர் இதனை தெரிவித்த அவர், மாநிலத்தில் தொழிற்பயிற்சி மையங்கள் வலுப்படுத்தப்படும் என்றார்.

பழங்குடியினர் அதிகம் வசிக்கும் பகுதிகளில் தொழிற்பயிற்சி மையங்கள் புதிதாக திறக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

உலகத்தரத்திற்கு இணையாக இந்திய இளையோரின் திறனை மேம்படுத்தும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் திரு ஜெயந்த் சௌத்ரி தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடியின் தலைமையின் கீழ் ஒட்டுமொத்த வடகிழக்குப் பகுதியும் மிகப்பெரிய முன்னேற்றத்தை அடைந்துள்ளதாக சிக்கிம் முதலமைச்சர் திரு பிரேம் சிங் தமாங் கூறியுள்ளார்.

காங்க்டாக்கில் வடகிழக்குப் பகுதி இளையோர் விழாவில் பேசிய அவர், கடந்த 10 ஆண்டுகளில் வடகிழக்கு மாநிலங்களில் சாலை, ரயில், விமான கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டுள்ளதாக கூறினார்.

தொழில் துறையிலும் இந்தப் பகுதி பெரிய வளர்ச்சியை எட்டியுள்ளதாகவும் திரு பிரேம் சிங் தமாங் தெரிவித்தார்.

முரு – சி தில்லி / 7

21 03 2025 7 15 தேர்தல் ஆணையம் - நடவடிக்கை-1

தேர்தல் நடைமுறைகளை வலுப்படுத்த முக்கிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இதுதொடர்பாக அந்த ஆணையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், தனித்துவ அடையாள ஆணையம் மற்றும் தேர்தல் ஆணையத்தின் நிபுணர் குழுக்கள் விரைவில் ஆலோசனைகளை தொடங்க இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரே எண் கொண்ட இருவேறு வாக்காளர் அடையாள அட்டைகள் தொடர்பான பிரச்சினைக்கு மூன்று மாதங்களுக்குள் தீர்வுகாணப்படும் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

தகுதியான வாக்காளர்கள் அனைவரும் வாக்காளர் பட்டியலில் இடம்பெறுவதை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வாக்காளர்களுக்கு இரண்டு கிலோமீட்டர் சுற்றளவுக்குள் வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்படுவது உறுதி செய்யப்படும் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

ஒரு வாக்குச்சாவடியில் அதிகபட்ச வாக்காளர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 200-ஐ தாண்டாமல் இருப்பதை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

உலக காடுகள் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

காடுகளின் முக்கியத்துவத்தையும், அதன் பாதுகாப்பையும் உணர்த்தும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 21-ஆம் தேதி இந்த தினம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

வனப்பரப்பை 33 சதவீதமாக அதிகரிக்கும் நோக்கில், மத்திய – மாநில அரசுகள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

காடுகளும், உணவும் என்ற கருப்பொருளில் இந்த ஆண்டு இந்த தினம் கடைபிடிக்கப்படுகிறது.

இதனையொட்டி, நாடு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

மத்தியப்பிரதேசத்தில் நதிகள் இணைப்புத்திட்டம் விரைந்து செயல்படுத்தப்பட்டு வருவதாக அம்மாநில முதலமைச்சர் திரு மோகன் யாதவ் கூறியுள்ளார்.

போபாலில் பன்னோக்கு நீர்பாசனத் திட்டத்தை தொடங்கிவைத்து பேசிய அவர், பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு நதிகள் இணைப்புக்கு முக்கியத்துவம் அளித்து வருவதாக கூறினார்.

மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர் பிரச்சினைகளை தீர்க்கவும் மத்திய அரசு முன்னுரிமை அளித்து செயல்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

மத்தியப்பிரதேசம் மற்றும் ராஜஸ்தான் இடையே நீண்டகாலமாக நிலவி வந்த நதிநீர் பிரச்சினைக்கு தீர்வுகாணப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

திறன் வாய்ந்த நீர்பாசனம், அதிக உற்பத்தித்திறன், மண்வளம் ஆகியவற்றில் மத்திய – மாநில அரசுகள் கவனம் செலுத்தி வருவதாகவும் திரு மோகன் யாதவ் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

அஸ்ஸாமில் ரசாயனம் மற்றும் உர உற்பத்தியை அதிகரிக்க மத்திய அரசு உயர் முன்னுரிமை அளிப்பதாக அம்மாநில முதலமைச்சர் திரு ஹிமந்த பிஸ்வ சர்மா கூறியுள்ளார்.

திப்ருகரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், **'Namroop'**-ல் உர தொழிற்சாலை அமைக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்திருப்பதை
சுட்டிக்காட்டினார்.

இந்த உர தொழிற்சாலையை அமைக்க மத்திய அரசு பத்தாயிரம் கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளதாகவும், இதில் 12 லட்சம் மெட்ரிக் டன் உரம் உற்பத்தி செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

மத்திய அரசின் இந்த முடிவுக்கு அஸ்ஸாம் மாநில அமைச்சரவை நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளதாகவும் திரு ஹிமந்த பிஸ்வ சர்மா கூறினார்.

<<<<<<>>>>>>

நாடு முழுவதும் இதுவரை 30 கோடியே 70 லட்சம் அமைப்புசாரா தொழிலாளர்கள் இ-ஷ்ரம் இணையதளத்தில் பதிவு செய்துள்ளதாக மத்திய தொழிலாளர் நலத்துறை இணையமைச்சர் ஷோபா கரந்தலாஜே கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர், தமிழகத்தில் மட்டும் 90 லட்சத்து 92 ஆயிரம் பேர் இதில் பதிவு செய்திருப்பதாக தெரிவித்தார்.

இத்தளத்தில் பதிவு செய்யும் தொழிலாளர்களுக்கு மத்திய அரசின் 13 திட்டங்களின் பயன்கள் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

<<<<<<>>>>>>

கோடை வெயிலின் தாக்கத்தினால் ஏற்படும் பாதிப்புகளை தடுப்பதற்காக நாடு முழுவதும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்த மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

ஆயுஷ் துறை இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

கோடை வெயிலினால் ஏற்படும் பாதிப்புகள் குறித்தும், அதனைத் தடுப்பதற்கான விழிப்பு நடவடிக்கைகள் குறித்தும் இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான மோதல் தீவிரமடைந்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமைக்கு பிறகு இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் 500 பாலஸ்தீனியர்கள் உயிரிழந்துள்ளதாக ஹமாஸ் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் தலைவராக ஜிம்பாப்வேயைச் சேர்ந்த திருமதி கிறிஸ்டி கோவெண்ட்ரி தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

கிரீஸில் நடைபெற்ற இதற்கான தேர்தலில், 97 வாக்குகளில் 49 வாக்குகளைப் பெற்று அவர் வெற்றி பெற்றார்.

ஜிம்பாப்வேயின் விளையாட்டுத்துறை அமைச்சராக பதவி வகித்துவரும் அவர், நீச்சல் போட்டியில் ஏழு ஒலிம்பிக் பதக்கங்களை வென்றுள்ளார்.

சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் முதல் பெண் தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ள அவர், எட்டு ஆண்டுகளுக்கு இந்தப் பொறுப்பை வகிப்பார்.

வரும் ஜூன் 24-ஆம் தேதி திருமதி கிறிஸ்டி கோவெண்ட்ரி இப்பொறுப்பை ஏற்பார்.

<<<<<<>>>>>>

அகமதாபாத் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **'Ishaque Eqbal- 'Faisal Qamar '** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 7-5, 6-4 என்ற செட் கணக்கில், இந்தியாவின் திக் விஜய் - ஜக்மீத் இணையை வென்றது.

**<<<<<<>>>>>>**

ஸ்விஸ் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் திரிஷா ஜாலி – காயத்ரி கோபிசந்த் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

நேற்று நடைபெற்ற மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 21-12, 21-8 என்ற செட் கணக்கில், ஜெர்மனியின் **Selin – Amelie** இணையை வென்றது.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் சங்கர் முத்துசாமி சுப்பிரமணியன் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

**<<<<<<>>>>>>**

இந்திய ஓபன் போட்டியின் வட்டு எறிதல் பிரிவில் சீமா தங்கப்பதக்கம் வென்றார்.

மும்பையில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் பிரிவில் அவர், 56 புள்ளி மூன்று ஒன்பது மீட்டர் தூரம் எறிந்து முதலிடம் பெற்றார்.

நீதிகா வர்மா வெள்ளிப் பதக்கமும், பிரியா வெண்கலப் பதக்கமும் வென்றனர்.

**<<<<<<END>>>>>>**